
# ஞா
# ன
# ஒ
# லி

www.newwisdomministries.com






ஞானம் 08 – ஒலி 25– 22.06.2025

# ஆசிரியர் பக்கம்





## சீடராய், வாழும் நற்செய்தியாய்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமான எனதருமை சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் ஞான ஒலி சார்பாக என் அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறப்பு நமக்கு மிகப்பெரிய இழப்பாக அமைந்துள்ளது. அவர் திருத்தந்தையாக 2013, மார்ச் 13ம் தேதி அன்று தேர்வு செய்யப்பட்ட உடன், அவர் திருஅவைக்கு கொடுத்த அறைகூவல் என்னவென்றால், நற்செய்திப் பணியை நவீன ஊடகங்களின் வழியாக செய்யுங்கள் என்பதுதான். அந்தக் காலக்கட்டத்தில்தான் நான் டிவைய்ன் விஸ்டம் மினிஸ்ட்ரீஸின் பணிகளை ஆரம்பித்திருந்தேன். அவரின் ஆசியுடன், அவரின் வழிகாட்டுதலின் துணையோடு நவீன ஊடகங்களைக் கற்றுக்கொண்டு நற்செய்திப் பணிகளை இன்றுவரை செய்து வருகின்றோம். இத்தருணத்தில் அவருக்கு நாம் நன்றிக்கடன் பட்டிருக்கின்றோம். அவரது ஆன்மா இறைவனில் என்றும் நிலைவான பேரின்பத்தில் நிலைத்து நமக்காகவும் இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருப்பார்.

அவரை இழந்து வாடிய கத்தோலிக்க் திருஅவைக்கு புதிய தலைவராக பரிசுத்த திருத்தந்தை 14ம் சிங்கராயர் அவர்களை நமக்குக் கொடுத்து, நம்மைப் புதிய, நவீன, உறுதியான, மேலான பாதையில் மீண்டும் வழிநடத்தும் நம் பரலோகத் தந்தைக்கு நன்றி கூறுவோம். நமது புதிய திருத்தந்தையின் ஆசீயோடு நாம் நம்மை மீண்டும் இறைப்பணியில் புதிப்பித்துக் கொண்டு நற்செய்திப் பணிகளை மீண்டும் உற்சாகம் குறையாமல் தொடர்வோம். இறைவனின் மாண்புக்காக அதைச் செவ்வனே செய்வோம்.

கடந்த 12 வாரங்களாக ஞான ஒலி இணைய இதழை உங்களுக்கு வழங்க முடியாததற்காக நான் மிகவும் வருந்துகின்றேன். தவிர்க்க முடியாத பணிச்சூழல்களாலும், மற்ற தனிப்பட்ட சூழல்களாலும் அப்பணியை செய்ய இயலவில்லை. இறைப்பணியை விட்டுவிடாது இனி தொடர எடுத்த முடிவின் காரணமாக நாம் இந்த இதழோடு மீண்டும் தொடர இறைவன் கொடுத்த அருளுக்காக அவருக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்த 12 வாரங்களில் வார இதழின் பணிகளைச் செய்ய முடியாத வேளையிலும் இறைவன் வேறொரு அச்சுப் பணியை வெற்றிகரமாகச்

செய்ய உதவினார்.

உங்களுக்குத் தெரியும் டிவைய்ன் விஸ்டம் மினிஸ்ட்ரீஸின் வழியாக இணைய இதழ், ஞான வானொலி என்ற இணைய வானொலி, இணைய திருத்தூதர் தொலைக்காட்சி போன்ற இணைய வழியில் நற்செய்திப் பணிகளைச் செய்து கொண்டிருந்த 40 பேர்களில் 13 ஆர்ஜேக்களின் சிலுவைப் பாதை சிந்தனைகளைத் தொகுத்து *வலியின் வழியே மீட்பு* என்ற புத்தகத்தை தவக்காலத்தில் தயாரித்தோம். கோவை மறைமாவட்ட ஆயர் மேதகு.தாமஸ் அக்வினாஸ் அவர்கள் அதை வெளியிட்டார்கள். அவருக்கும், அந்தப் புத்தகத்திற்கு பங்களித்த அனைத்து ஆர்ஜேக்களுக்கும் நான் நன்றிக் கூறிக்கொள்கின்றேன்.

கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக டிவைய்ன் விஸ்டம் மினிஸ்ட்ரீஸின் சார்பாக புத்தப் பணியையும் ஆரம்பிக்க வேண்டும் எனறு மிகவும் ஆசையாக இருந்தேன். ஒருவேளை அதற்காகத்தானோ இந்த 12 வாரங்களாக இந்த இணைய இதழை நடத்த முடியாத சூழல் உருவானதோ எனறு நினைக்கத் தோன்றுகிறது. எதுவாக இருந்தாலும் எல்லாம் நமது நன்மைக்கே,

நம் புதிய பரிசுத்தத் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் 2025, மே 8ம் தேதி தேர்வு செய்யப்பட்டு தம் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சமயத்தில் தன் முதல் அறைகூவலாக, உண்மையும் சமாதானத்தின் நற்செய்தியை அனைத்து மக்களுக்கும் முக்கியமாக அனைத்துப் படைப்புகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறினார்.

நற்செய்தி அறிவிப்பே திருஅவையின் வாழ்வாகும். அதற்காகவே திருஅவை இவ்வுலகில் இயங்குகின்றது.

அதனடிப்படையில் கிறிஸ்தவர்களாகிய நாம், முக்கியமாக திருமுழுக்கு பெற்ற அனைவருமே, இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பின் சாட்சிகளாக அதை உலகுக்கு நாள்தோறும் அறிவிக்க நம்மை நாம் மீண்டும் புதுப்பித்துக் கொள்வோம்.

திருப்பலியில், திருவுடல், திருஇரத்த அபிஷேகத்திற்குப்பின், குருவானவர், இது நம்பிக்கையின் மறைபொருள் என்று சொன்னவுடன், நாம் இயேசுவின் மறையுண்மைகளை அறிந்தவர்களாய், இயேசுவின் இறைப்பிரசன்னத்தை உணர்ந்த சாட்சிகளாய், ஆண்டவரே, நீர் வருமளவும், உம் மரணத்தை அறிக்கையிடுகின்றோம், உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம் என்று நமது நற்செய்திப் பணியின் உறுதிமொழியை அனைவர் முன்னும் அறிக்கையிடுகின்றோம். இறைவன் முன்னும், அனைத்து சபையார் முன்னும் கொடுத்த வாக்குறுதியின்படி நாம் நமது நற்செய்திப் பணியில் உண்மையாய் இருப்போம். ஆமென்.





# விவிலியம் அறிவோம்

## முதல் நீதித் தலைவர்கள்

### விளக்கம் 155

நீதித்தலைவர்கள் நூலில் முதல் நீதித் தலைவராக வருபவர் ஒத்னியேல். இவரைப் பற்றிய கதை மிகவும் பொதுவானதாக அமைந்துள்ளது. இக்கதையில் காணும் நிகழ்வுகள் எப்போது, எங்கே, எப்படி நடந்தது என்ற குறிப்புகள் இல்லை. ஒத்னியேலைப் பற்றிய குறிப்புகளும் மிகவும் சுருக்கமாக உள்ளன. ஒத்னியேல் அனைத்தையும் எளிதில் செய்து முடிக்கிறார். அனைத்தும் தொடர்ச்சியாக நடக்கின்றன. இஸ்ரயேல் மக்கள் பாவம் செய்கிறார்கள்; கடவுள் அவர்களை பகைவனிடம் ஒப்படைக்கிறார்; இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிடுகின்றனர்; அவர்களுக்கு விடுதலை அளிக்க ஆண்டவர் ஒத்னியேலை எழச்செய்கிறார்; பகைவன் ஒடுக்கப்பட்டு நாடு அமைதி பெறுகிறது. நீதித்தலைவர்கள் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதற்கு ஒத்னியேல்; எடுத்துக்காட்டாக வருகிறார். ஒத்னியேலின் வெற்றிக்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை அவரது கீழ்ப்படிதலும், ஆண்டவருடைய ஆவியால் ஆட்கொள்ளப்படுதலும் ஆகும். ஒருவர் கடவுளுக்குக் கீழ்ப்படிபவராக இருந்தாலும் ஆண்டவருடைய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு செயல்படும்போதுதான் ஆண்டவருடைய திருவுளத்தை நிறைவேற்றுபவராக வாழமுடியும். ஒத்னியேலுடைய வெற்றி ஆண்டவரின் வெற்றியாகச் சித்தரிக்கப்படுகிறது. கடவுள் எதிரிகளை அவரின் கைகளில் ஒப்படைக்கிறார். இதன் வழியாக கடவுள்; இஸ்ரயேல் மக்களுக்குப் போர்முறையைக் கற்பிக்கிறார்.

இக்கதையில் வருகின்ற ஒரு முக்கியமான கருத்து இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரை மறப்பதாகும். ஆண்டவரை மறத்தல் என்பது அவரது உடன்படிக்கையை மறப்பது; அவர் செய்த நன்மைகளை மறப்பது; அவரது கட்டளைகளை மறப்பது, மற்றும் வேற்று தெய்வங்களை வழிபடுவதைக் குறிக்கிறது.

யோசுவாவின் காலத்தில் வாழ்ந்த மக்கள் ஆண்டவரின் வல்ல செயல்களை அறிந்திருந்ததால் அவரை எப்போதும் நினைவில் வைத்து அவருக்கு ஊழியம் செய்தனர். யோசுவாவின்

தலைமுறையினர் இறந்தபிறகு உள்ளவர்கள் ஆண்டவரை அறியாவதவர்களாக, அவர் செய்த வல்ல செயல்களைத் தெரியாதவர்களாக இருப்பதால் ஆண்டவரை மறந்தவர்களாக இருக்கிறார்கள். ஆண்டவரை மறப்பதன் விளைவு சாவு (இச 8:19). நீதித் தலைவர்கள் காலம் முழுவதும் இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரை மறந்தவர்களாகவே இருந்தார்கள் (காண்க 1 சாமு 12:9).

இரண்டாவது நீதித்தலைவராக வருபவர் ஏகூது. இக்கதையில் இஸ்ரயேலின் பகைவர்களாக மோவாபியர்களும், அம்மோனியர்களும், அமலேக்கியர்களும் சித்தரிக்கப்படுகின்றனர். மோவாபியர்கள் லோத்தின் வழிமரபினர் (தொநூ 19:37). எனவே இஸ்ரயேல் மக்களோடு தொடர்புடையவர்கள். இவர்கள்; யூதாவின் கிழக்குப்பகுதியில் வாழ்ந்தார்கள். கானான் நாட்டை நோக்கிய பாலைவனப் பயணத்தின்போது தங்கள் நாட்டின் வழியாக இஸ்ரயேலர் செல்வதற்கு மோவாபியர்கள் அனுமதிக்கவில்லை (நீத 11:17); மோவாபிய அரசனனான பாலாக்கு இஸ்ரயேலரைச் சபிப்பதற்காக பிலயாம் என்ற இறைவாக்கினரை மெசப்பெத்தோமியாவிலிருந்து வரவழைக்கின்றான் (எண் 22-24). பிற்காலத்திலும் மோவாபியர்களுக்கும் இஸ்ரயேலருக்கும இடையே உள்ள உறவில் பெரிய மாற்றமில்லை (காண்க 2 அரசர்கள் 3; 13:20; 24:2). இஸ்ரயேலின் இறைவாக்கினர்கள் பலரும் மோவாபியருக்கு எதிராக இறைவாக்குரைக்கிறார்கள் (எசாயா 15-16; எரேமியா 48; செப்பா 2:8-11). அம்மோனியர்கள் யோர்தானின் வடகிழக்குப்பகுதியின்; இடைப்பகுதியில் வாழ்ந்தவர்கள். இவர்களின் வரலாறு இஸ்ரயேல் மக்களுடைய வரலாற்றிற்கு இணையானது. அமலேக்கியர்கள் ஏதோமியர்களுடன் தொடர்புடையவர்கள் (தொநூ 36:16). எபிரேய விவிலியத்தில் இவர்களை நாம் அடிக்கடிச் சந்திக்கிறோம். இஸ்ரயேலிய மரபுகளில் அமலேக்கியர்களும் அம்மோனியர்களைப் போலவும் மோவாபியர்களைப் போலவும் எதிரிகளாகக் கருதப்பட்டவர்கள்.

சாக்கடலின் தென்கிழக்குக் கரையில் அமைந்ததுதான் மோவாபு நாடு. மோவாபு அரசன் வடக்கில் வாழ்ந்துவந்த அமோரியர்களுடனும் தெற்கில் நாடோடிகளாக வாழ்ந்த அமலேக்கியர்களுடனும் கூட்டணி வைத்து செயல்படுவதாகக் காட்டப்படுகிறான். ஆனால் இந்தக் கதையின் பின்னணி எரிக்கோவைச் சுற்றியுள்ள யோர்தானின் மேற்குக் கரையில் நடப்பதுபோல் உள்ளது (3:13). 3:20 இல் குறிப்பிடப்படும் குளிர்ந்த மேலறை இதற்கு சான்றாக உள்ளது. ஏனெனில் எரிக்கோவைச் சுற்றியுள்ள பாலைவனத்திற்குத்தான் இது பொருந்தும். 3:26 இல் வரும் செயிரா என்ற இடம் எங்கிருந்தது

என்று தெரியவில்லை. ஏகூதின் தந்திரமும் எக்லோனின் பருத்த உடம்பும் ஏகூதின் வெற்றிக்கான சிறப்புக்கூறுகளாக வருகின்றன. பருத்த மனிதன் என்ற சொற்றொடர் பல கருத்துக்;களை வெளிப்படுத்துகிறது: விரைவில் இயங்க முடியாத தன்மை, சந்தேகமற்ற இயல்பு, அவமானத்திற்குரிய கூறு போன்றவற்றைக் கூறலாம். எக்லோனைப் பற்றிய இந்தக் குறிப்பு அவனை அவமானப்படுத்தும் நோக்குடன் எழுதப்பட்டிருக்கலாம். இக்குறிப்பு பின்னால் நடக்க இருப்பவற்றிற்கு ஒரு முன்னோட்டமாகவும் உள்ளது எனலாம்.

இந்தக் கதை 3:21 இல் உச்ச நிலையை அடைகிறது. ஏகூதின் கூர்மதியும் எக்லோனின் கையாலாகத்தனமும் எக்லோன் கொலை செய்யப்படுவதற்கு காரணங்கள் ஆகின்றன. 3:26-30 வரையுள்ள பகுதியில் ஆசிரியர் கதையை விரிவடையச் செய்கிறார். ஏகூது எக்லோன் மீது கொள்ளும் வெற்றியை அனைத்து இஸ்ரயேலர்களும் மோவாபியர்கள்மேல் கொள்ளும் வெற்றியாக மாற்றுகிறார். எக்லோன் என்ற பெயருக்கு இளம் காளை அல்லது கொழுத்த கன்று என்று அர்த்தம் (காண்க 3:17). ஏகூது எக்லோனைக் கொலைசெய்வதை தாவீதின் படைத்தளபதியான யோவாபு அவனது எதிரியான அமாசாவைக் கொலைசெய்வதற்கு ஒப்பிடலாம் (காண்க 2 சாமுவேல் 20:9-10). யோவாபும் இடது கையால் தனது குறுவாளை எடுத்து அமாசாவைக் கொலைசெய்கிறான். ஏகூதின் சூழ்ச்சியும் தந்திரமும் கடவுளின் கைகளில் கருவிகளாகின்றன. இந்தக் கதை எவ்வாறு கடவுள் இஸ்ரயேலுக்கு தீர்ப்பளிப்பவராகவும் மீட்பை கொண்டு வருபவராகவும் உள்ளது என்பதைக் காட்டுகிறது. இறைவனின் திருவுளத்திற்கேற்பதான் மனிதர்களின் தந்திரமும் சூழ்ச்சியும் செயல்படுகிறது. இந்தக் கதை எவ்வாறு இஸ்ரயேலின் வீரன் ஒருவன் தங்களைத் துன்புறுத்துபவனையும் அவனது பணியாளர்களையும் எளிதில் ஏமாற்றுகிறான் என்று பெருமையடிக்கிறது. தங்கள் மன்னன் இறந்துவிட்டதால் குழப்பமடைந்த மோவாபியர்கள் யோர்தானைக் கடந்து தங்கள் வீடுகளுக்குச் செல்ல முயற்சிக்கிறார்கள். ஆனால் கடவுத்துறைகளைக் கைப்பற்றிய இஸ்ரயேலர் அவர்களை அழிக்கின்றனர் (3:26-29). ஏகூதுவின் வீரச் செயலால் நாடு எண்பது ஆண்டுகள் அமைதியாக இருக்கிறது (3:30).

நீதித் தலைவர்கள் நூலில் மூன்றாவது நீதித் தலைவராக வருபவர் சம்கார். நீதித் தலைவரான சம்காருக்கு ஒரு சொற்றொடரே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சொற்றொடரின் மூலமும் நோக்கமும் தெளிவில்லாமல் உள்ளது. ஏனெனில் இதற்கு இணையான பகுதிகள் இந்நூலில் எதுவுமில்லை. பெரிய நீதித் தலைவர்களின் கதைகளுடனோ

அல்லது சிறிய நீதித் தலைவர்களின் குறிப்புகளுடனோ சம்காரைப்; பற்றிய குறிப்புகள் ஒத்துவரவில்லை. 4:1 ஏகூது இறந்தபின் எனத் தொடங்குவதால் சம்காரைப் பற்றிய குறிப்புகள் ஒரு இடைச்செருகலாகத் தெரிகிறது. சம்கார் எந்த இனத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடப்படவில்லை; அதேவேளையில் அவர் ஒரு சிறந்த நீதித் தலைவராக 5:6 சித்தரிக்கிறது.

இவர் அனாத்தின் மகன் சம்கார் எனக் குறிப்பிடப்படுகின்றார். அனாத்து என்ற பெயர் கானானியர்கள் வழிபட்டுவந்த மூன்று தேவதைகளில் ஒரு தேவதையின் பெயராகும். ஒரு சில அறிஞர்கள் அனாத்து ஒரு இடத்தின் பெயர் எனக் கூறுகின்றனர். பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி சம்கார் இஸ்ரயேல் மக்களில் ஒருவர் அல்ல. சம்கார் என்ற பெயரும் செமித்தியப் பெயராகத் தெரியவில்லை. சோகின் என்ற அறிஞர் சம்கார் ஒரு கனானேய வீரர் என்றும், சில நேரங்களில் பெலிஸ்தியர்களை வென்று இஸ்ரயேல் விடுதலைபெற உதவிகள் புரிந்திருக்கலாம் என்றும் கருதுகின்றார். சம்காரின் காலத்தில் இஸ்ரயேல் மக்களின் பகைவர்களாக பெலிஸ்தியரைக் குறிப்பிடுவதும் பொருந்துவதாக இல்லை. நீதித் தலைவர்களின் இறுதிக் காலத்தில்தான் பெலிஸ்தியர்கள் இஸ்ரயேல் மக்களின் பகைவர்களாக வருகின்றனர். மேலும் பெலிஸ்தியர்களைக் கலப்பைக் கொழுவால் கொல்வது சிம்சோனின் கதையை நினைவூட்டுகிறது (15:14-17). சிம்சோனைப் போல வலிமையுள்ளவராக, கலப்பைக் கொழுவால், தனிமையில் எதிரிகளைக் கொல்ல வல்லவராக சம்கார் இருக்கின்றார். அவருடைய பிறப்பும், குல அடையாளமும் தெரியாதது அவரைப்பற்றிய மறைபொருளை பெரிதாக்குகிறது.

பயணம் தொடரும்,

அருட்பணி முனைவர் ஆ. அலெக்ஸ் cmf








அருட்பணி.நல்ல ஜேக்கப்
கோவை

ஜூன் 22-2025

# பொதுகாலம் 12 ம் வாரம்-ஞாயிறு

## கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழா

### தொடக்க நூல் 14:18-20, 1 கொரி 11:23-26, லூக்கா 9:31-17

நற்கருணை இயேசு கிறிஸ்துவை முழுமையாகவும் நிறைவாகவும் பிரசன்னப்படுத்தும் அருளடையாளம். பிற பிரசன்னகளை விட நிறைவாக இயேசு கிறிஸ்துவை பிரசன்னப்படுத்துவது நற்கருணை. நற்கருணை முழுமையான இயேசு கிறிஸ்துவை தன்னகத்தே கொண்டுள்ளது. நற்கருணையே எல்லா அருடயாளங்களின் நோக்கமாகவும், நிறைவுமாக இருக்கின்றது. (திருவழிபாடு 7,38)

ஒரு பங்கில் திரு உடல் திரு ரத்த பெருவிழா கொண்டாட்டம். அதற்காக ஆலயம் முழுவதுமாக பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஜோடனைகள் எல்லாம் ஒரு வித உற்சாகம் கலந்த உணர்வு தந்தது. பார்ப்பதற்கே மிகவும் அழகாக இருந்தது. எனவே அந்த ஆலயத்தை பார்க்க இரு நபர்கள் விருப்பப்பட்டனர். ஒருவர் பிட்சை எடுத்து பிழைக்கும் மனிதர். இன்னொருவர்? தன் பிட்சை பாத்திரத்தை எடுத்து கொண்டு உள்ளே நுழைய முற்பட்ட போது உள்ளே செல்ல ஒருவர் கூட அனுமதிக்க வில்லை. உன்ன எல்லாம் யாரு உள்ளவிட்டது? நீ எல்லாம் வாசலுக்கு வெளிய தான் இருக்கனுமே தவிர உள்ள எல்லாம் வரக்கூடாது! என்று சொல்லி விட்டார்கள். பிச்சைகாரருக்கு மிகவும் வருத்தம். ஆலயத்திற்குள்ள தானே விடவில்லை, அதன் மதில் சுவரையாவது ஒரு முறை சுற்றி பார்க்கலாம் என்று நடக்க தொடங்கினார். தூரத்தில் யாரோ நிற்பது போல் இருந்தது. அருகே செல்ல செல்ல அங்கு நிற்பது இயேசு என்று தெரிந்தது. உடனே ஓடோடி சென்று தனக்கு நடந்த கொடுமைகளை கூறினார். எல்லாவற்றையும் பொறுமையாக கேட்ட இயேசு சொன்னாராம்:அட போப்பா! அவங்க என்னயே உள்ள விடல!

பிரியமானவர்களே! இயேசுவின் திரு உடல் திரு ரத்தப் பெருவிழா நாளை இன்று சிறப்பிக்கும் நமக்கு நம்மையே சுய ஆய்வு செய்து கொள்ள கொடுக்கப்பட்ட அழைப்பு தான் இது! விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார் (யோவா 6: 51-52) கிறிஸ்தவ நம்பிக்கையின் ஒரு முக்கிய கூறு நற்கருணை ஆகும். இயேசு தம்மையே நமக்கு உணவாகவும் பானமாகவும் அளித்துள்ளார் என்பதே அந்நம்பிக்கை. யோவான் நற்செய்தி இந்த உண்மையை விரிவாக விளக்குகிறது (யோவா 6). இயேசு தந்தையாம் கடவுளிடமிருந்து பெற்ற வாழ்வை நம்மோடு பகிர்ந்துகொள்கின்ற கருவியாக நற்கருணை உள்ளது (யோவா 6:57). இயேசு நமக்குத் தம் உடலை (சதையை) உணவாகவும், இரத்தத்தைப் பானமாகவும் தருகிறார் (யோவா 6:55). மனித இறைச்சியை யாராவது உண்டால் அது சரியே என நாம் ஏற்பதில்லை. அப்படியிருக்க, இயேசு தம் சதையை நமக்கு உணவாக்குவது எப்படி முறையாகும்? இக்கேள்வியை இயேசுவிடமே கேட்டனர் அக்கால மக்கள். அதற்கு இயேசு அளித்த பதில்: எனது சதை உண்மையான உணவு; என் இரத்தம் உண்மையான பானம் என்பதே (யோவா 6:55). உடலை வளர்க்க உதவும் உணவு நமக்கு நிலையான வாழ்வை அளிக்க முடியாது. ஆனால் இயேசு வழங்குகின்ற அவருடைய சதை என்னும் உணவு நமக்கு நிலை வாழ்வை அளிக்கும் (யோவா 6:51,54,58). எனவே, இயேசு தருகின்ற உணவு முற்காலத்தில் வழங்கப்பட்ட மன்னா என்னும் உணவை விடவும் உயர்ந்தது. அவ்வுணவை உண்டவர்கள் மீண்டும் இறந்தார்கள். ஆனால் இயேசுவின் உடலை உண்போர் எந்நாளும் உயிர்வாழ்வர். இயேசு வழங்குகின்ற உயிர் இம்மண்ணகத்தைச் சார்ந்ததல்ல மாறாக, எந்நாளும் நிலைத்துநிற்கின்ற விண்ணகத்தைச் சார்ந்தது. தந்தையாம் கடவுள் இயேசுவோடு எந்நாளும் இணைந்து வாழ்வதுபோல நாமும் கடவுளின் உயிரை நம்மில் கொண்டு அவர்

வழியாகவே வாழ்வோம். அந்த வாழ்வுக்கு ஒருநாளும் முடிவு இராது.

நீங்கள் உண்டு பருகும்போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அறிவிக்கிறீர்கள். கிறிஸ்துவில் என்னை அடையாளபடுத்தி கொள்ளுதல் என்பதை மையமாக கொண்டு இறைவார்தையின் அடிப்படையில் சிந்தனை செய்வோம். பவுல் கொரிந்து நகர மக்களின் மத்தியில் சில வேற்றுமைகள் மற்றும் பிரச்சினைகளை காண்கிறார். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும் ஏழை பணக்காரன் என்றும் காண்கிறார். முதலாளிகள் பணக்காரர்கள் இறைவார்த்தையை முன்பு அமர்ந்து கேட்கிறார்கள் பின் பந்தியில் முதன்மையாக அமர்ந்து நல்லனவற்றை உண்கிறார்கள். ஆனால் பின்னால் பந்தியில் அமர்கின்ற உழைகின்ற ஏழை எளியவர்கள் மேல் அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள். பசியோடு வருபவனை பட்டினி போடுகிறார்கள் . எனவே அவர்களுக்கு நல்லதொரு பாடத்தை கற்பிக்கவே நற்கருணையை மையமாக கொண்டு அவர்களுக்கு நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள். என்று கற்பிகின்றார்.

அப்பத்தில் சிலுவை காணுங்கள்; கிண்ணத்தில் இரத்தத்தின் அருளை உணருங்கள்.என்கிறார் புனித அகஸ்டின்.

நற்கருணை என்பது தேவனுடைய இருதயத்தின் இரைச்சல், அது நம்மை மன்னிக்க, நேசிக்கத் தூண்டுகிறது. என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எப்போது நாம் அனைவரும் அவர் நினைவாக இந்த பந்தியில் அமர்ந்து உண்கிறோமோ அப்போதெல்லாம் கிறிஸ்துவில் நம்மை அடையாளபடுத்தி கொள்கிறோம். அப்போது ஏழைகளின் மேல், பசித்திருப்பவர்களின் மேல் கொண்டிருந்த இயேசுவின் மனநிலையே நமக்கும் இருக்க வேண்டும் என்கிறார் புனித பவுல்.

நற்கருணை என்னும் அருமையான மறைபொருளைப் பற்றிச் சிந்திக்க இன்று ஒரு சில நொடிகள். இயேசு தன் உடலையே நமக்கு உணவாகத் தந்திருக்கிறார். மிகப் பெரிய பேறு பெற்றவர்கள் நாம். காரணம். வானதூதர்களுக்குக்கூட கிட்டாத பேறு அது. எனவே, நிலைவாழ்வு தரும் அந்த உணவை நாம் ஆவலுடன், ஆர்வமுடன், பற்றுறுதியுடன் பெற வேண்டும். நற்கருணையின் முழு ஆற்றலையும் பெற்றிட:

1.நம்பிக்கை வேண்டும்.இயேசுவே வாழ்வு. அவரது உடலும் இரத்தமும் நிலை வாழ்வு தருவது என்ற நம்பிக்கை வேண்டும். ‘இதை ஏற்றுக் கொள்வது மிகக் கடினம்; இப்பேச்சை இன்னும் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா?‘ என்ற நம்பிக்கையற்றவர்கள், முணுமுணுப்பவர்கள் இவ் வாழ்வைப் பெற முடியாது. பலர் அவரை விட்டு விலகினர்.

2.நிறைவான மனம் வேண்டும். கிடைத்ததில் நிறைவடைய வேண்டும். இறைவன் தந்தது போதும். இறைவன் தந்தது நல்லது என்ற நிறைவு வேண்டும். ஆசைப்பட்டு அவதிபடக்கூடாது. கையில் இருப்பதில் நிறைவடையாமல் பறப்பதற்கு ஆசைப்படக்கூடாது. இருப்பதையும் இழப்பற்கு ஏதுவாகும்.

3.இணைந்திருக்க வேண்டும். ‘எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்.‘ (யோவா 6:56) ‘நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனிதர இயலாது.‘(யோவா 15:4) ‘நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்.‘(யோவா15:7)

4.வாழ்வாக்க வேண்டும். நற்கருணையை வாழ்ந்து அனுபவிக்க வேண்டும். அப்போது நிலை வாழ்வை அனுபவிப்போம். பிறருக்காக வாழும்போது, தியாகத்தில், இழப்பதில், கொடுப்பதில் இந்த நற்கருணையை நாம் வாழ்கிறோம்.அப்போது நிலை வாழ்வை, நிறை வாழ்வை நற்கருணையிலிருந்து பெறுகிறோம். நிறை வாழ்வைப் பெறுவோம்.

செபம்: வானக உணவான இயேசுவேஇ நிலைவாழ்வு தரும் உணவாக உம்மையே எங்களுக்குத் தந்திருப்பதற்காக உம்மைப் போற்றுகிறேன். நிறைவு தரும் உம் திருவுடலை நான் மதிப்புடன் பெற அருள் தாரும். மாபெரும் உமது கொடைக்காக எந்நாளும் நான் நன்றி சொல்வேனாக. உமக்கே புகழ், உமக்கே நன்றி, உமக்கே மாட்சி, ஆமென்.



# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



அறுபடாமலே புறக்கணிக்கப்படுகிறது இரண்டாவது செருப்பு,
சில நல்ல உள்ளங்களைப்போல.

எதையும் மன்னிப்பேன். அது என் குணம், ஆனால்
எதையும் மறக்கமாட்டேன். அது என் திமிரு.

நீங்கள் தனியாகப் பயணம் செய்ய வேண்டும்.
அந்தப் பயணத்திலே, நீங்களே உங்கள் ஆசிரியராகவும்,
மாணவராகவும், இருக்க  வேண்டும்.
–ஜே.கிருஷ்ணமூர்த்தி

Discussion is an exchange of Knowledge,
Arguments an exchange of Ignorance.

Take time to improve but Don’t wast time to prove.

Tearing others down never actually builds you up.
True worth comes from creation, not destruction.

If God is with you,
Stop acting like the odds are against you.

Being too friendly invites a lots of disrespect.

Too much attention makes a donkey think he is a lion.

Intellectuals solve problems.
Genius prevent them.- Albert Einstein

Don’t feed every dog you see hungry.
Some just need a little strength to bite you.

# விவிலிய விதையின் விருட்ச விந்தைகள்

## ஆத்ம மனவாளர்...



திருமதி.லீமா விக்டோரியா
தமிழாசிரியை

இறைவன் மூவொரு கடவுளா? ஆம். பிதா. சுதன். தூய ஆவி என்னும் மூவொரு கடவுள் நமக்கு ஒரே கடவுளாக இருக்கிறார். அதிலும் நம் மீது அன்பாய் இருக்கிறார் என்பதை அறிவோம். சான்றாக பழைய ஏற்பாட்டில் விடுதலைப் பயண நூலில் மோசேவோடு பேசிய ஆண்டவர், அவரை தனியே சீனாய் மலைக்கு அதிகாலையில் ஏறி வர கட்டளை இடுகிறார். கற்பலகைகளை எடுத்துக்கொண்டு தனியே மலை மீது ஏறி வர வேண்டும். துணையாக எவரையும் அழைத்து வரக்கூடாது மலை மீது எந்த ஆடு மாடுகளும் மனிதரும் காணப்படக்கூடாது என்ற நிபந்தனைகளை வைக்கிறார். அவரும். கடவுள் வார்த்தைகளை தலையாய் கொண்டு யாவற்றையும் நேர்த்தியாக செய்து முடித்து ஆயத்தமாகி. அதிகாலையில் புறப்படுகிறார்.

ஆண்டவர் மோசேயை நோக்கி முன்னவை போன்ற இரு கற்பலகைகளை வெட்டி எடுத்துக் கொள் நீ உடைத்துப் போட்ட முன்னைய பலகைகளில் மேல் இருந்த வார்த்தைகளையே நான் இப்பலகைகளின் மேல் எழுதுவேன். முன்னேற்பாடு செய்து கொண்டு காலையிலேயே சீனாய் மலை மேல் ஏறிச் செல். அங்கே மலையுச்சியில் என் முன் வந்து நில். உன்னோடு வேறெவனுமே ஏறி வர வேண்டாம்.. மலையெங்கிலும் எவனுமே காணப்படலாகாது அந்த மலைக்கு எதிரே ஆடு மாடுகள் மேயவும் கூடாது என்றார்.. விடுதலைப் பயணம் 34 1-3. பொதுவாக இச்சூழலில் நாம் மிகவும் பயப்படுவோம் எப்படி இருள் சூழ்ந்த நேரத்தில் பயங்கரமான மலை உச்சியில் பாதை தெரியாத மலை மீது காட்டு விலங்குகளோ பயங்கரமான மிருகங்களோ நடமாடுகிற சூழலில் தனியாக எப்படி செல்வார் என்றும் ஒருவேளை நாம் அந்த இடத்தில் இருந்தால் போகவே மாட்டோம் என்று நினைத்துக் கொள்வோம். ஆனால் விவிலியத்தில் உள்ள இறைவாக்கினர்கள்.. கடவுள் மனிதர்கள் எவ்வளவு அன்பும் பயமும் கீழ்ப்படிதலும் பெற்றிருந்தார்கள் என்பது வியப்பு.. கடவுளும் அவர்கள் கீழ்படிகிறார்களா என்பதை ஆவலோடு கவனித்துக் கொண்டே இருந்தவராக இருக்கிறார் இதை நமக்கு அடுத்த வசனங்கள் கூறுகிறது. அவ்வாறே மோசே முன்னைய போன்ற இரண்டு கற்பலகைகளை வெட்டி எடுத்துக் கொண்டார் ஆண்டவர் தமக்குக் கட்டளையிட்டபடி அதிகாலையில் எழுந்து சீனாய் மலை மேல் ஏறிச் சென்றார். தம் கையில் இரு

கற்பலகைகளையும் கொண்டு போனார். விடுதலைப் பயணம் அதிகாரம் 34 4.

மலையில் எந்த இடத்தில் குண்டோ, குழியோ இருக்கும் என்பது தெரியாது. பாறையாக இருக்கலாம். அதனால் வழுக்கி விழ நேரிடலாம். எனவே ஏதாவது ஒரு கம்பு ஒன்றை எடுத்து வரச் சொல்லி இருக்கலாம். ஆனால் எதுவும் இல்லாமல் கைகளில் கற்பலகைகளை சுமந்து கொண்டு வா என்று கூறி விட்டார் ஆண்டவர். ஆனால் மோசே இது எப்படி சாத்தியம் என்று கூட கேள்வி கேட்கவில்லை. ஆனால் மெத்த படித்த அறிவாளிகளுக்கு இது முட்டாள்தனமாகத்தான் தெரியும். இதைத்தான் பவுல் புதிய ஏற்பாட்டில் கடவுள் மீது நான் கொண்டுள்ள நம்பிக்கை இறைப்பற்று இல்லாத மனிதர்களுக்கு அறிவிலியாக இருக்கிறேன் என்று தோன்றும் என்கிறார். கடவுளின் மீது வைத்த நம்பிக்கை மனித மூளைக்கு, அறிவுக்கு அப்பாற்பட்டது என்பது இறைப்பற்றுள்ள மனிதர்கள் மட்டுமே அறிவர்.

அடுத்த வசனத்தில் ஆண்டவரின் எதிர்பார்ப்பு மற்றும் பாதுகாப்பு. எத்துனை பெரிது என்பதை அறிய முடிகிறது. ஆண்டவர் மேகத்தில் இறங்கி வந்து அங்கே அவர் பக்கமாய் நின்று கொண்டு ஆண்டவர் என்ற பெயரை அறிவித்தார். அப்போது ஆண்டவர் அவர் முன்னிலையில் கடந்து செல்கையில் விடுதலைப் பயணம் 34 5. 6. என் தாசன் மோசே வருவான். என் மீது நம்பிக்கை கொண்டு எதற்கும் அஞ்சாமல் தனியே என்னை நாடி தேடி வருவான் என்று மோசேக்கு முன்பதாக சீனாய் மலை அடிவாரத்திலேயே காத்திருந்தார். ஆண்டவர் எவ்வளவு நல்லவர்..

மேகத்தில் இறங்கி வந்து மோசே பக்கமாய் நின்று கொண்டு நான் வந்திருக்கிறேன் ஆண்டவர் நான் வந்திருக்கிறேன் என்று மோசேயை திடப்படுத்தி மேகத்தோடு அழைத்து மோசேக்கு வழிகாட்டியாக கடந்து சென்றிருக்கிறார்..

என்னே என் ஆனந்தம் என்ன என் ஆனந்தம் என்று மோசே மகிழ்ந்து களித்திருப்பார்.

உண்மையாய் உண்மையாய் ஆண்டவரை நாடித் தேடும் அனைவருக்கும் ஆண்டவர் ஆத்ம மணவாளனாக என்றும் இருக்கிறார்.. இருந்து கொண்டிருக்கிறார். நாமும் ஏன்?எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை ஆண்டவர் முன் வைக்காமல் ஆண்டவர் சித்தத்தை செய்ய சாட்சிகளாக வாழ உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கும் பிள்ளைகளாக வாழ்ந்து இறைவனை மகிழ்விப்போம்



அவரே நம் ஆத்ம மணவாளன்.

இயேசுவுக்கே புகழ்
இயேசுவுக்கே நன்றி

மரியே வாழ்க